வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 18.06.2026 வியாழக்கிழமை இதழ் : 163 பக்கங்கள் : 08

திருகோணமலை கடற்படையின் இரகசிய தடுப்பு முகாமுக்கு 'சீல்'!

கொடூர சித்திரவதைகள் அம்பலமானதை அடுத்து குற்றப்புலனாய்வு திணைக்களம் அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 28

திருகோணமலை கடற்படை முகாமுக்குள் அமைந்திருந்த, "கன் சைட்" எனப்படும் நிலத்தடி இரகசியத் தடுப்பு முகாம் வளாகத்தைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உத்தியோகபூர்வமாக சீல் வைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த இரகசிய முகாமில் சுமார் 60 நபர்கள் வரை சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு, கொடூர சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், கப்பம் கோரப்பட்டமை உள்ளிட்ட பல பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய விவரங்கள் விரிவான விசாரணைகளின் மூலம் வெளிச்சத்துக்கு வந்ததை அடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலத்தடி வளாகத்தை உத்தியோகபூர்வமாகப் பரிசீலனை செய்வதற்காக திருகோணமலை நீதவான் இன்று அங்கு நேரடி விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான பிரதான வழக்கிற்கு மேலதிகமாக, மேலும் பல தனிநபர்கள் இந்த இரகசிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்கான புதிய சான்றுகள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன.

இதற்கமைய கேகாலையைச் சேர்ந்த சாந்தா என்பவரின் வழக்கு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றத்திலும், கொழும்பில் இரண்டு தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணை கொழும்பு இலக்கம் மூன்று நீதவான் நீதிமன்றத்திலும் தற்பொழுது அறிக்கையிடப்பட்டுள்ளன.

அத்துடன், இப்பாகமுவ பகுதியைச் சேர்ந்த பிரதீப் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த இரண்டு யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

07

யோஷிதவுக்கு பிணை!

கொழும்பு, ஜூன். 18

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று காலை கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபரை தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 3 சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு

07

சுற்றுலா மேம்பாட்டு நிதி முறைகேடு;

பஸில் ராஜபக்ஷவை கைது செய்ய உத்தரவு!

கொழும்பு, ஜூன். 18

சுற்றுலா மேம்பாட்டு பணியக நிதி முறைகேடு தொடர்பான வழக்கில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைக் கைது செய்து

07

இலங்கையில் அதிகூடிய எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட மனித புதைகுழியாக செம்மணி!

பார்வையிட நீதியமைச்சர் நாளை வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூன். 18

இலங்கையில் அதிகளவான மனித என்பு கூடுகள் மீட்கப்பட்ட மனிதப் புதைகுழியாக செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது.

இந்நிலையில், செம்மணி மனித புதைகுழியை நாளை வெள்ளிக்கிழமை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான விசேட குழுவினரும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளடங்கிய விசேட குழுவினரும் நேரில் பார்வையிடவுள்ளனர்.

இதுவரை காலமும் மன்னர் சதொச புதைகுழியில் இருந்து 376 மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டமையே, இலங்கையில் அதிகளவான மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழியாக காணப்பட்டது.

இந்நிலையில் செம்மணியில் நேற்று

07

காங்கேசனிலிருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயற்சித்த 25 பேர் தடுத்துவைப்பு!

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், ஜூன். 18

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து, கப்பல் ஊடாக இந்தியாவுக்கு தங்கம் கடத்துவதற்கு முயற்சித்தனர் எனக் கூறப்படும் சுமார் 25 பேரின் பயணம் நேற்று சுங்க அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்தியப் பிரஜைகள் இருவரிடம் தலா 100 கிராம் தங்கம் பறிமுதல்

07

ரவி, ஷானி ஆகியோருக்கு பதவி வழங்குமாறு கர்தினாலோ திருச்சபையோ கோரவேயில்லை!

கொழும்பு பேராயர் இல்லம் விளக்கம்

கொழும்பு, ஜூன். 18

தற்போதைய பதவிகளுக்கு ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோர் நியமிக்கப்படவேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் அல்லது கத்தோலிக்க திருச்சபை எப்போதும் கோரிக்கை விடுக்கவில்லை என்று கொழும்பு பேராயர் இல்ல பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில், பாராளுமன்றத்தில்

07

கோட்டாவின் கைது தடை மனு இன்று விசாரணைக்கு!

கொழும்பு, ஜூன். 18

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள மனுவை இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் றோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு

07

பல்கலை மாணவர் அனுமதி ஒகஸ்ட் இரண்டாம் வாரத்தில்!

கொழும்பு, ஜூன். 18

2025 மற்றும் 2026 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைத் தலைவர், பேராசிரியர் வசந்த லியனகே இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், இம்முறை மொத்தம் 92,043 மாணவர்கள் அரச

07

ஏ-9 வீதியில் பூனாவ பகுதியில் விபத்தில் இருவர் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜூன். 18

யாழ்ப்பாணம்-கண்டி பிரதான வீதியின் பூனாவ, கல்கண்டேகம பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர்

07

இந்திய-இலங்கை வர்த்தக மேம்பாட்டுக்கு புதிய நிதிசார் கொள்கை நடைமுறைகள்!

அறிவித்தார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஜூன். 18

இந்திய ரூபாய் மற்றும் இலங்கை ரூபாய்க்கு இடையிலான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை வலுப்படுத்துவதற்கான புதிய நிதிசார் கொள்கை நடைமுறைகளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற "இந்திய - இலங்கை வர்த்தகப் பாதையை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பிலான வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விவரங்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை மேம்படுத்துவதில் உள்ளூர் நாணயப் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ந்து வரும் பொருளாதாரக் கூட்டாண்மை மற்றும் நாணயக் குடியேற்ற பொறிமுறையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற வங்கிகள் ஊடாக இந்திய ரூபாய் மதிப்பிலான கடன்களை வழங்குவதற்கு அனுமதிக்கும் புதிய கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் வங்கித் தீர்வுகள் குறித்து பாரத ஸ்டேட் வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளால் இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எல்லை கடந்த வர்த்தகங்கள் சுமுகமாக நடைபெறும் என்பதுடன், பரிவர்த்தனைச் செலவுகள் குறைவடைந்து இருதரப்பு வர்த்தகத்தின் ஸ்திரத்தன்மை அதிகரிக்கும் எனவும் இந்த மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)

பொலிஸ் சேவை தொடர்பான மக்கள் கருத்துக்களுக்கு கியூ.ஆர். அறிமுகம்!

கொழும்பு, ஜூன். 18

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான கருத்துகள், முறைப்பாடுகள், பாராட்டுகள் மற்றும் ஆலோசனைகளைப் பொதுமக்கள் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக இலங்கை பொலிஸார் "Sri Lanka Police Community Feedback Portal" என்ற பெயரிலான கியூ.ஆர். குறியீடு மூலம் இயங்கும் ஒரு டிஜிற்றல் அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சேவையானது, குடிமக்கள் தங்கள் கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகளை எளிதாக வழங்குவதற்கான வாய்ப்பை அளிப்பதும், அந்தத் தரவுப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி மக்களை மையமாகக் கொண்ட மிகவும் திறமையான சேவையை வழங்குவதையும் நோக்காக் கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அமைப்புமுறையின் மூலம், குடிமக்கள் பொலிஸ் நிலையங்களில் காட்டப்படும் கியூ.ஆர். குறியீட்டை ஸ்கான் செய்து, ஒரு இணையத்தளத்தை அணுகி தங்கள் பதில்களைச் சமர்ப்பிக்கலாம்.

இந்த குறியீட்டை பயன்படுத்தி https://feedback.police.lk/ இணையத்தளத்தை அணுகி உங்கள் தகவல்களை சமர்ப்பிக்கமுடியும்.

மேலும், இலங்கை பொலிஸாரின் 'ழடஉைந.டம இணையத்தளத்தில் உள்ள மின்-சேவைகள் மற்றும் சமூக கருத்துப் பகிர்வு தளத்தை பார்வையிடுவதன் மூலம், பொதுமக்கள் தங்கள் கருத்துக்களையும் முறைப்பாடுகளையும் எளிதாக வழங்க முடியும்.

(அ)

இலங்கைக்கு 5 மில்லியன் டொலர் பெறுமதியான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கியது இந்தியா!



கொழும்பு, ஜூன். 18

இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு மற்றும் மருத்துவத் தேவைகளுக்காக இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட நவீன இராணுவ உபகரணங்கள் மற்றும் அவசர விபத்துச் சிகிச்சைக்கான மருத்துவத் தொகுதி என்பன உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

சிறீ ஜெயவர்தனபுர கோட்டையிலுள்ள பாதுகாப்புத் தலைமையக வளாகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில், இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இந்த உபகரணங்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோவும் கலந்துகொண்டார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த இராணுவத் தளபாடங்களின் ஒட்டுமொத்த மதிப்பு 5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெய்ட்டி நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையில் கடமையாற்றும் இலங்கை இராணுவப் பிரிவினருக்காக, இந்தியப் படைகளால் வழங்கப்பட்ட விசேட உபகரணங்களும் இதனுள் அடங்கும்.

(அ)

2030 ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானமாக ஈட்டுவதற்கு இலக்கு!

அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி

கொழும்பு, ஜூன். 18

இலங்கையின் பொருளாதாரத்தை உலகளாவிய ரீதியில் பன்முகப்படுத்தி வலுப்படுத்தும் நோக்கில், 2026 -2030 காலப்பகுதிக்கான தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஏற்றுமதி வருமானமாக ஈட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் 2026-2030 காலப்பகுதிக்கான தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி திட்டத்தை அறிமுகப்படுத்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை பன்முகப்படுத்தி, சேவைத் துறையை மையமாகக் கொண்ட பொருளாதாரத்திலிருந்து கைத்தொழில் மற்றும் உற்பத்தித் துறையை மையமாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், கனிம வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல், தேயிலை, கடல் உணவுகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் உள்ளிட்ட ஏற்றுமதி பொருள்களை சர்வதேச சந்தைகளில் மேம்படுத்தல், புதிய முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கியுள்ளதுடன், ஏற்றுமதியாளர்களுக்கான டிஜிற்றல் சேவைகள் மற்றும் தேவையான வசதிகளும் மேம்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். இந்தத் திட்டம் இலங்கையை வலுவான மற்றும் நிலையான ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(அ)

ஈஸ்டர் தாக்குதலை வைத்து நாம் அரசியல் செய்ததில்லை

ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது



கொழும்பு, ஜூன். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி முன்னிற்கும். அவ்வாறு இல்லாமல் ஈஸ்டர் தாக்குதலை வைத்துக்கொண்டு ஒருபோதும் நாங்கள் அரசியல் செய்ததில்லை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்யாத ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். பொதுவாக மதத்தை பிரசாரம் செய்து நாங்கள் ஒருபோதும் அரசியல் செய்வதில்லை. அதனால் தற்போது இடம்பெறும் உயிரித்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை தொடர்பிலும் அந்த விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் ஒருபோதும் விமர்சனங்களை முன்வைத்ததில்லை..

ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறோம். அதற்காக நாங்கள் முன்னிற்போம்.

அதேநேரம் தற்போது குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார். அது இடம்பெறவேண்டியதாகும். ஆனால் விசாரணைகளில் அவருக்கு ஏதாவது அநீதி ஏற்படுவதாக இருந்தால், அதனை அவர் நீதிமன்றம் ஊடாக அதற்கான நீதியை பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் விசாரணை இடம்பெற வேண்டிய இடத்தில் அது இடம்பெறவேண்டும். விசாரணை நடவடிக்கைகள் சரியான முறையில் இடம்பெறுகின்றதா என கண்காணிக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியதாகும்-என்றார்.

(அ)

வவுனியா உணவக உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பரிசோதகரினால் தெளிவூட்டல்

வவுனியா, ஜூன். 18

வவுனியாவில் உணவகங்களை நடத்தும் உரிமையாளர்கள் மற்றும் அது சார்ந்த பிரதிநிதிகளுக்கான தெளிவூட்டல் கலந்துரையாடல் ஒன்று வவுனியா வர்த்தகர்சங்கக் கட்டடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கே.கிருஸ்ணமூர்த்தியின் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், நகரப் பகுதிகளில் உணவகங்களை நடத்தும் உரிமையாளர்கள் மற்றும் அவர்கள் சார்பான பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது உணவகங்களில் உணவுகளை கையாளும் முறை மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக வவுனியா நகர சுகாதாரப் பரிசோதகரால் அவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

அத்துடன் உணவகங்கள் தொடர்பாக அதனை நடத்துபவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

(அ)



ஈழநாடு

Eelanadu

18.06.2026 வியாழக்கிழமை

பராபவ வருடம், ஆனி 04

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

ஆட்சியின் உறுதி பற்றிய அரசாங்க தலைவர்களின் நம்பிக்கை

அமெரிக்காவும் ஈரானும் சமாதான உடன்படிக்கையில் நாளைய தினம் ஜெனீவாவில் கைச்சாத்திவிருக்கும் நிலையில், எரிபொருட்களின் விலைகள் குறைந்தால் பொருளாதார இடர்பாடுகள் குறையும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், எதிரணி கட்சிகளோ நான்கு வருடங்களுக்கு முன்னர் நாடு முகங்கொடுத்ததைப் போன்ற பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படும் என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கொந்தளிக்கப்போகிறார்கள் என்றும் அபாய அறிவிப்புச் செய்து கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சியைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை உருவாகும் என்று கூட சில அரசியல்வாதிகள் கூறுகிறார்கள்.

அதேவேளை, ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவும் அரசாங்க தலைவர்கள் பலரும் 2022 பொருளாதார வீழ்ச்சி போன்று மீண்டும் ஏற்படுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் தங்களது அரசாங்கத்தை எவராலும் அசைக்க முடியாது என்றும் கடுமையான நம்பிக்கையுடன் கூறுகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இலங்கையின் முன்னைய அரசாங்கங்களில் எந்தவொன்றுக்குமே இருந்திராத மூன்றில் இரண்டுக்கும் கூடுதலான பெரும்பான்மைப் பலம் பாராளுமன்றத்தில் இருக்கிறது. ஆனால், எதிரணி கட்சிகள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பதில் அரசாங்கத் தலைவர்களிடத்தில் ஒருவித தடுமாற்றத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

பொருளாதாரத்தை கையாளுகின்ற முறை மற்றும் ஊழல் முறைகேடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் மீது எதிரணி முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களுக்கு எதிர்வினை ஆற்றும் போது அரசாங்கம் உறுதியான நம்பிக்கையுடன் அன்றி, தற்காப்புப் பாணியில் நடந்துகொள்கிறது.

மற்றைய அரசியல் கட்சிகளைப் போன்று, தேசிய மக்கள் சக்தி குறிப்பாக அதன் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கட்சித் தாவல் போன்ற சீர்கேடுகளினால் பாதிக்கப்படக்கூடிய அரசியல் இயக்கம் அல்ல இறுக்கமான ஒழுங்கமைப்பையும் பெருமளவுக்கு கட்டுப்பாடுடைய உறுப்பினர்களையும் கொண்டது.

ஆட்சிமுறை அனுபவக்குறைவு தொடர்பிலான விமர்சனங்களுக்கு மத்தியிலும், பாரம்பரிய ஆளும் வர்க்க கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக ஊழல் எதிர்ப்பு விசாரணைகளை அரசாங்கத்தினால் முன்னெடுக்கக்கூடியதாக இருப்பதுடன் நிருவாகக் கட்டமைப்புக்களில் துணிச்சலுடன் படிப்படியாக மாற்றங்களையும் செய்யக் கூடியதாக இருக்கிறது.

ஆனால், நடைமுறைச் சாத்தியத்தன்மையை பற்றி சிந்திக்காமல் 2024 தேசிய தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு அள்ளி வீசிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறது. இது விடயத்தில் மத்திய கிழக்கு போர் போன்ற வெளிப்புற நெருக்கடிகளும் டித்வா சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களும் வசதியான சாட்டாக அமைந்துவிட்டன.

பொருளாதார மீட்சிக்கு முற்றுமுழுதாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்திலேயே தங்கியிருப்பதால் அதன் நிபந்தனைகளின் பிரகாரம் விரும்பத்தகாத சிக்கன நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுப்பதுடன் புதிய வரிகளையும் அரசாங்கம் விதிக்க வேண்டியிருக்கிறது. இதனால், சனத்தொகையின் அதிகப் பெரும்பான்மையானவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் விளைவாக, அமோக தேர்தல் வெற்றிக் காலத்துடன் ஒப்பிடும்போது தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய மக்கள் ஆதரவுத்தளத்தில் கணிசமான சரிவு ஏற்பட்டிருக்கிறது. 2025 மே உள்ளூராட்சி தேர்தல்கள் இதற்கு முதல் உதாரணம்.

தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்த முறைமை மாற்றம் மற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் பற்றி இனிமேலும் மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகக் கூறமுடியாது. முறைமை மாற்றம் என்பது உண்மையில் என்ன என்பதைப் பற்றிய விளக்கமில்லாமலேயே எல்லோரும் அதைப் பற்றிப் பேசினார்கள்.

அரசாங்கத்தை எவராலும் அசைக்க முடியாது என்ற அரசாங்கத் தலைவர்கள் என்னதான் கூறினாலும், பாராளுமன்றப் பலமும் கட்சிக் கட்டமைப்பும் எவ்வளவுதான் உறுதியானதாக இருந்தாலும், மக்களின் வாழ்வாதாரச் சுமைகளை அரசாங்கம் எந்தளவு தூரம் திறமையாகக் கையாளுகிறது என்பதிலுமே மக்களின் நன்மதிப்பை எவ்வாறு தக்கவைத்துக் கொள்கிறது என்பதிலுமே அதன் உறுதிப்பாடு தங்கியிருக்கிறது.

வாசலில் எல் நினோ;
நாம் தயாராக இருக்கிறோமா?

இலங்கை, வெள்ளம் முதல் வறட்சி வரையிலும், தற்போது ஒரு மாபெரும் காலநிலை முரண்பாட்டின் சீர்குலைக்கும் விளைவுகள் வரையிலும், அதன் நியாயமான பங்கை விட அதிகமான தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொள்வதாகத் தெரிகிறது.

உலக வானிலை அமைப்பு (WMO), வெப்ப மண்டல பசிபிக் பெருங்கடலில் அசாதாரணமான முறையில் வெப்பமடைந்து வரும் நீர்நிலைகள் காரணமாக, எல் நினோ (El Niño) நிலைமைகள் வேகமாக உருவாகி வருவதாகவும், அவை வரும் மாதங்களில் மேலும் கடுமையான வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு வடிவங்களை உந்தித்தள்ளும் என்றும் எச்சரித்துள்ளது.

இந்த நிகழ்வின் மிகக் கடுமையான பாதிப்பைச் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

சில காலநிலை நிபுணர்கள் இலங்கை கடுமையான எல் நினோ பாதிப்பை எதிர்கொள்ளாமல் போகலாம் என்று கூறியுள்ளனர். இருப்பினும், மிக மோசமான சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு தயாராவது விவேகமானதாகும்.

தகவலறிந்து முடிவெடுத்தல், திட்டமிடல் மற்றும் தயார்நிலைக்கான நேரம் இதுவே என்று உலக வானிலை அமைப்பு வலியுறுத்தியுள்ளது. “அறிவியல் தெளிவாக உள்ளது: எல் நினோ வரும் மாதங்களில் 90 சதவீத உறுதியுடன் நமது வீட்டு வாசலுக்கு வந்து கொண்டிருக்கிறது. உலக நாடுகள் இதை ஓர் அவசர காலநிலை எச்சரிக்கையாகக் கருத வேண்டும்,” என்று ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டெரெஸ் கூறியுள்ளார்.

உலகம் பல ஆண்டுகளாக எல் நினோ நிகழ்வுகளை அனுபவித்துள்ளது, எனவே அவற்றை எதிர்கொள்வது எப்படி இருக்கும் என்பதை அது அறியும். இருப்பினும், கேள்வி என்னவென்றால், இத்தகைய எச்சரிக்கைகள் எல் நினோவின் பாதிப்பைக் குறைப்பதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்க இலங்கையைத் தூண்டுமா என்பதுதான்.

இந்த எல் நினோ பாதிப்பானது, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் ஒரே நேரத்தில் வெள்ளம் மற்றும் வறட்சியை ஏற்படுத்தி ஒரு இரட்டைப் பாதிப்பை (Double whammy) ஏற்படுத்தும்.

நெருக்கடிகள் மற்றும் பேரழிவுகளுக்கு விரைவாகப் பதிலளிக்கத் தவறுவதிலும், அவற்றைப் புறக்கணிப்பதிலும் இலங்கை அவப்பெயர் பெற்றுள்ளது.

2004 டிசம்பரில் சுனாமி கரையைத் தாக்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, கடல் மர்மமான முறையில் உள்வாங்கியதைக் கண்டும் யாரும் ஆபத்தை உணரவில்லை. இதன் விளைவாக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியாயின. 2019 ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்துப் பல எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன, ஆனால் யாரும் தடுப்பு நடவடிக்கை எடுக்க முனையவில்லை.

2022 ஆம் ஆண்டில் நாட்டை முடக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று பல வல்லுநர்கள் எச்சரித்தனர், ஆனால் அதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, எல் நினோவைக் கருத்தில் கொண்டு பேரழிவு அபாயக் குறைப்பு வழிகளில் தீவிரமாக எதுவும் செய்யப்பட வாய்ப்பில்லை என்று சில தரப்பில் வெளிப்படுத்தப்படும் பயம் ஆதாரமற்றது அல்ல.

கடந்த ஆண்டு, டித்வா சூறாவளி அப்போதைய அரசாங்கத்தைத் தயாரற்ற நிலையில் ஆழ்த்தியதுடன், ஆரம்பத்தில் பேரழிவுக்கு பதிலளிக்கும் அமைப்பை நிலைகுலையச் செய்தது. எல் நினோவின் பாதிப்பு பல மாதங்களுக்கு நீடிக்கும் என்பதால், இது இன்னும் கடுமையானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



எல் நினோவின் முதல் பலி, பருவமழையை நம்பியிருக்கும் விவசாயத் துறையாகும். எல் நினோவினால் ஏற்படும் வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பெரும்பாலான நாடுகள், பல பருவங்களில் பயிர் இழப்புகளை எதிர்கொள்கின்றன. மேலும் இதன் விளைவாக ஏற்படும் நீடித்த உணவுப் பற்றாக்குறை, அரசியல் எழுச்சிகளுக்கு வழிவகுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

உணவு இறக்குமதிக்கான சாத்தியமான அதிகரிப்பு, இலங்கையின் வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை துயரங்களை மேலும் மோசமாக்கக்கூடும். அநேகமாக, பல நாடுகள் விவசாய ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த நிர்ப்பந்திக்கப்படலாம். அங்குதான் சிக்கல் உள்ளது.

எனவே, இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ள காலநிலை- நெகிழ்வுத்தன்மை கொண்ட வீட்டுத் தோட்டத் திட்டத்திற்கு (Climate-smart home gardening initiative) விவசாய வல்லுநர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

எல் நினோவின் பாதிப்பு பொதுவாக மின்சாரம் மற்றும் எரிசக்தி போன்ற பிற துறைகளுக்கும் பரவுகிறது. தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்தியதால், நுரைச்சோலையில் மின் உற்பத்தி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. நீர்த்தேக்க மட்டங்கள் செங்குத்தாகக் குறைந்து, நாட்டின் நீர்மின் உற்பத்தித் திறனைக் கடுமையாகக் குறைத்தால், செலவுக் காரணி மற்றும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் காரணமாக டீசலை எரிப்பதன் மூலம் நுரைச்சோலை மின் உற்பத்திப் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியாது.

மின்சாரம், எரிசக்தி மற்றும் நீர் பற்றாக்குறை ஆகியவை தொழில்துறைத் துறையைப் பாதித்து, பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றன. பொருளாதார இழப்புகளுக்கு அப்பாற்பட்டு, எல் நினோ வறுமை, நோய் மற்றும் கல்வி சீர்குலைவுகள் போன்ற பரந்த சமூகச் செலவுகளையும் உள்ளடக்கியது.

நீர்ப் பாதுகாப்பு, காலநிலை-நெகிழ்வுத் தன்மை கொண்ட விவசாயம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலமும், பேரழிவுத் தயார் நிலையை வலுப்படுத்துவதன் மூலமும், எல் நினோவின் கடுமையான பாதிப்பைக் குறைப்பதற்கான நன்கு சிந்திக்கப்பட்ட திட்டம் தன்னிடம் இருப்பதாக ஜே.வி.பி-தேசிய மக்கள் சக்தி (JVP-NPP) அரசாங்கம் பொது மக்களை நம்ப வைக்க விரும்புகிறது.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உணவுப் கொள்கை மற்றும் பாதுகாப்புக்குழு குழு, எல் நினோவின் பாதிப்பைக் குறைப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து, குறிப்பாக விவசாயம், நீர் சேமிப்பு மற்றும் குடிநீர் விநியோகம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

எதையும் செய்து பார்த்தால்தான் அதன் பலன் தெரியும் என்பார்கள இந்த முயற்சியில் அரசாங்கம் வெற்றியடையும் என்றும், மற்ற அனைத்து பங்குதாரர்களும் இதற்குத் தோள் கொடுப்பார்கள் என்றும் மட்டுமே நாம் நம்ப முடியும்.

(தி ஐலண்ட், ஆசிரிய தலையங்கம், 2026 ஜூன் 15)

ஜூன் - 18 வியாழக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 04
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை

இன்றைய ராசிபலன்

மேடம்
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடிவருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

இடபம்
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம்வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும்.

மிதுனம்
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

கடகம்
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

சிம்மம்
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல்கள் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

கன்னி
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

துலாம்
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

விருச்சிகம்
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

தனுசு
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

மகரம்
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

கும்பம்
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

மீனம்
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

தேசிய ரீதியில் சிறந்த புத்தாக்க செயற்பாட்டுக்கான விருதைப் பெற்றார் வேம்படி மகளிர் மாணவி ரூபிகா

யாழ்ப்பாணம், ஜூன். 18

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ரூபிகா அருந்தவம் தேசிய ரீதியில் சிறந்த புத்தாக்கச் செயற்பாட்டுக்கான விருதை பெற்றுள்ளார்.

வருடாவருடம் தேசிய ரீதியில் சிறந்த புத்தாக்குனர்களையும் புத்தாக்க செயற்பாடுகளையும் ஊக்கப்படுத்தும் வகையில் விருது வழங்கும் விழா இடம்பெற்று வருகிறது.

இவ் வருடத்திற்கான விழா காலி முகத்திடல் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

SLASSCOM
INGENUITY AWARDS 2026
101
101

இதில் வட மாகாண பாடசாலை ரீதியில் சிறந்த புத்தாக்குனராகவும் இவ்வருடத்திற்கான சிறந்த புத்தாக்குனராகவும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த செல்வி ரூபிகா அருந்தவம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

இந்த மாணவி கடந்த ஜூன் 05ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட காலநிலை மாற்றத்துக்கான புதிய கண்டுபிடிப்புப் போட்டியிலும் பங்குபற்றி சிறப்பு சான்றிதழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை;

குற்றமற்றவர்கள் என இரண்டு பேர் 9 வருடங்களுக்கு பின்னர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன். 18

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் உயர் நீதிமன்றினால் உறுதி செய்யப்பட்ட தீர்ப்பை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் குற்றவாளிகளுக்கு வாசித்து மீண்டும் உறுதிப்படுத்தியது.

அதேவேளை உயர் நீதிமன்றினால், வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட இருவரையும் மேல் நீதிமன்று நேற்று முன்தினம் விடுதலை செய்தது.

புங்குடுதீவு பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவி கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்கு செல்லும் வேளையில் கடத்தப்பட்டு, கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் ட்ரயல் அட் பார் முறையில் அப்போதைய மேல் நீதிமன்ற நீதிபதிகளான பாலேந்திரன் சசி மகேந்திரன், அன்னலிங்கம் பிரேமசங்கர் மற்றும் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அதன்போது 09 எதிரிகளுக்கு எதிராக 41 குற்ற சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

"ட்ரயல் அட் பார்" தீர்ப்பாய முறைமையிலான விசாரணைகள் நடைபெற்று தீர்ப்பாயம் கடந்த 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி இருவர் மீதான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க முடியாதமையால், இருவர் விடுதலை செய்யப்பட்டதுடன், ஏனைய ஏழு பேருக்கும் மரண தண்டனை விதித்தும் 30 வருடச் சிறை தண்டனையும் விதித்தும் தீர்ப்பளித்தது.

குறித்த தீர்ப்பை எதிர்த்து 07 பேரும் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்ததை அடுத்து, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், விசாரணை நடைபெற்ற காலப் பகுதியில் மரண தண்டனை கைதிகளில் ஒருவரான பூபாலசிங்கம் தவக்குமார் என்பவர் சிறையில் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார்.

ஏனைய 06 பேருக்கான விசாரணைகளில் இருவர் மீதான தண்டனையை நீக்கி, ஏனைய நான்கு பேரின் தண்டனையை கடந்த மே மாதம் 06ஆம் திகதி உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.

இந்நிலையில், தண்டனை உறுதி செய்யப்பட்டவர்களின் தீர்ப்பை மீளவும் உறுதி செய்வதற்காக குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 25ஆம் திகதி அழைக்கப்படவிருந்த நிலையில், மரண தண்டனை கைதியான பூபாலசிங்கம் ஜெயக்குமார் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

அதனால் குறித்த வழக்கு அன்றைய தினம் மேல் நீதிமன்றில் அழைக்கப்படவில்லை.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது, மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட பூபாலசிங்கம் ஜெயக்குமார் மற்றும் பூபாலசிங்கம் தவக்குமார் ஆகியோர் உயிரிழந்த நிலையில் ஏனையவர்களான தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்தன் மற்றும் மகாலிங்கம் சசிகுமார் (சுவிஸ் குமார்) ஆகிய நால்வரும் பாதுகாப்பு காரணங்களுக்காக நிகழ்நிலை ஊடாக மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு உயர்நீதிமன்ற தீர்ப்பை மேல் நீதிமன்றம் வாசித்து தண்டனையை உறுதி செய்தது.

அதேவேளை குறித்த வழக்கில் இருந்து உயர் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட மகாலிங்கம் சசிதரன் மற்றும் ஜெயதரன் கோகிலன் ஆகியோர் மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். (அ)

மாணவர்களுக்குப் போதை விற்பனை; வியாபாரிகள் இருவர் ஐஸுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன். 18

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டி பகுதியில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்று தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு இருவரிடம் இருந்தும் 5.2 கிராம் மற்றும் 5கிராம் ஐஸ் போதைப்பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அண்மையில் வேலணைப் பகுதியில் இடம்பெற்ற மாடு திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

பாடசாலைகளுக்கிடையிலான கரம் போட்டி; வடக்கின் சம்பியனானது வேலணை மத்தி!

School Sports Competition - 2026
CHAMPION

யாழ்ப்பாணம், ஜூன். 18

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான "கரம்" போட்டியில் வேலணை மத்திய கல்லூரி 17 வயதுப் பிரிவு பெண்கள் கரம் அணி சம்பியனாகி தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளது.

பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுத்துறையில் அதிகளவில் பிரகாசித்துவரும் தீவக பிரதேச மாணவர்களுக்கு இத்த வெற்றி மேலும் தன்னம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு வருடங்களாக வேலணை மத்திய கல்லூரியின் கரம் அணி மூன்றாம் இடத்தை பெற்றிருந்த நிலையில் மாணவர்களது விவேகம் மிக்க திறமையாலும், பாடசாலையின் அதிபர் ஹஸ்ரன் றோயின் முழுமையான ஒத்துழைப்புடன் உடற்கல்வி ஆசிரியர் அனோஜனின் இடையுறாத பயிற்சியின் மூலம் இந்த வெற்றி கிடைத்துள்ளது.

வாய்ப்பு கிட்டும் முதல் சந்தர்ப்பத்திலேயே மக்களுக்கு எரிபொருள் விலை நிவாரணம்!

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 18

அமெரிக்கா - ஈரான் இடையிலான உடன்படிக்கையைத் தொடர்ந்து உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், உள்நாட்டிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய முதல் சந்தர்ப்பத்திலேயே எரிபொருள் விலை குறைப்புக்கான பலன் வழங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எனினும், உலக சந்தையில் நிலவும் தற்போதைய நிச்சயமற்ற தன்மை காரணமாக விலை குறைக்கப்படும் குறிப்பிட்ட காலப்பகுதியை தற்போதைக்கு உறுதியாகக் கூற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகச் சந்தையில் ஏற்படும் சாதகமான மாற்றங்களின் நன்மைகளை மக்களுக்கு நேரடியாகக் கடத்துவதே அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாகும் எனத் தெரிவித்த அவர், நாட்டின் பொருளாதாரச் செயல்பாடுகளை எவ்வித தடையுமின்றி சீராக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமாயின் மக்களுக்கு இந்த எரிபொருள் நிவாரணங்களை வழங்குவது அவசியமாகும் என்றும் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் இன்னும் இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை. ஒருவித நிச்சயமற்ற நிலைமையே நீடிக்கிறது. இந்த மாதத்துக்காக முற்பதிவு செய்யப்பட்ட அனைத்து எரிபொருள் கப்பல்களும் ஏற்கனவே நாட்டை வந்தடைந்துள்ளன. மேலும் ஒரு மசகு எண்ணெய் கப்பல் மாத்திரமே வர வேண்டியுள்ளது. அமெரிக்கா மற்றும் ஈரான் தரப்பினர் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடும் பணிகள் நாளை வெள்ளிக்கிழமைக்குள் அதிகாரபூர்வமாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை இந்த உடன்படிக்கை கையெழுத்தான பின்னர் உலகப் பொருளாதார நிலைமை சாதகமான முறையில் மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தச் சாதகமான சூழ்நிலையின் நல்ல பலன்கள் எமது நாடு போன்ற நாடுகளுக்கும் கிடைக்கும் பட்சத்தில், அதன் நன்மைகள் நிச்சயமாக மக்களுக்கு வழங்கப்படும். தற்போதும் கூட திறைசேரியிலிருந்து கணிசமான அளவு தொகையை மானியமாக வழங்கித்தான் தற்போதைய எரிபொருள் விலை இந்த மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது.

ஏப்ரல் மாதம் வரை முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட எரிபொருள் மானியப் பொதிக்காக 100 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஜூன் மாதத்துடன் அந்த மானியக் காலம் முடிவடைகிறது. தற்போது மாதத்தின் நடுப்பகுதி என்பதால் உலகச் சந்தை மாற்றங்களைச் சாதகமாக உற்றுநோக்க வேண்டியுள்ளதுடன், தற்போதே அவசரப்பட்டு தீர்மானங்களை எடுத்து மாத இறுதியில் என்ன நடக்கும் என்று கூறுவது நியாயமற்றது -என்றார்.

(அ)

ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதியங்கள் மிகவிரைவில் முத்தரப்பு பேரவையின் கீழ்!

கொழும்பு, ஜூன். 18

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் அனைத்துப் பணிகளையும் அரசு, தொழில் வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முத்தரப்புப் பேரவையின் ஒருங்கிணைந்த நிர்வாகப் பணிச்சட்டகத்தின் கீழ் கொண்டு வருவதற்கான சாத்தியவளங்களை ஆராய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காகத் தொழில் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவர்களாக 2.5 மில்லியனுக்கும் அதிகமான ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதன் சொத்து மதிப்பு 4.9 ட்ரில்லியன் ரூபாய்களுக்கும் அதிகம்.

இதன் பொறுப்பு, முதலீட்டு முகாமைத்துவம், நிதி நிர்வாகம் மற்றும் அங்கத்தவர்களின் அனுகூலங்களைச் செலுத்தும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கிக்கு உள்ளது.

தொழில் வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களைப் பதிவு செய்தல், இணக்கங்களை வலுவாக்கம் செய்தல், மீதித்தொகையை அறவிடுதல் மற்றும் ஊழியர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு தொழில் திணைக்களத்திடம் காணப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.

தற்போது 03 மில்லியனுக்கும் அதிகமான ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதன் சொத்துப் பெறுமதி 637.5 பில்லியன்களுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றது.

தொழில் வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முத்தரப்புப் பேரவை ஒன்றின் மூலம் ஏற்கனவே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

சமூகப் பாதுகாப்புக்கு என முத்தரப்பு நிர்வாகமொன்று காணப்படுவது சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு சிறந்த நடைமுறையாகும். இது சர்வதேச தொழிலாளர் அமைப்பால் ஊக்குவிக்கப்படுகின்ற அடிப்படைக் கோட்பாடாகும். (அ)

சிறைச்சாலை, தடுப்புக்காவலில் நிகழும் மரணம், சித்திரவதை குறித்து முறையீடு

கொழும்பு, ஜூன். 18

இலங்கையில் சிறைச்சாலைக் காவல் மற்றும் தடுப்புக்காவலில் நிகழும் மரணங்கள் மற்றும் சித்திரவதைகள் குறித்து இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான துணைக் குழுவிடம் கைதிகள் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக நாட்டில் தங்கியிருக்கும் ஐ.நா. தூதுக்குழுவிடம் கடந்த திங்கள்கிழமை எழுத்துபூர்வமான மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அந்தக் குழுவின் நிறைவேற்று பணிப்பாளர் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார்.

நடப்பு 2026ம் ஆண்டில் மாத்திரம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து ஏழு காவல் மரணங்கள் பதிவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள அக்குழு, சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடி தேசிய மட்டத்தில் 286.6 வீதமாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் சிறைச்சாலைகளின் நிலைமைகளில் எதிர்பார்த்த சீர்திருத்தங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவித்துள்ள கைதிகள் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு, அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுக்குச் சிறைகளில் சிறப்பு வசதிகள் வழங்கப்படுவதாகவும் வெலிசறை மற்றும் பூஸா தடுப்பு முகாம்களில் கைதிகளைப் பார்வையிடச் செல்லும் சட்டத்தரணிகள் ஆடைகளைக் களைந்து அவமானகரமான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் ஐ.நா. தூதுக்குழுவின் அவதானத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. (அ)

குறைந்த பயன்பாட்டு அரச காணிகளை முதலீடுகளுக்காக பயன்படுத்த திட்டம்!

கொழும்பு, ஜூன் 18

குறைந்த பயன்பாட்டில் உள்ள அரச காணிகளை புதிய முதலீட்டு வாய்ப்புகளுக்காக பயன்படுத்தும் வகையில் புதிய கொள்கையொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அரச காணி மற்றும் காணி அபிவிருத்தி தொடர்பான சுற்றறிக்கைகளை மீளாய்வு செய்து, காலாவதியானவற்றை இரத்து செய்தல் மற்றும் புதிய சுற்றறிக்கைகளை அறிமுகப்படுத்துவது குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அரசின் வருவாயை அதிகரிக்கும் வகையில் நீண்டகால காணிக்குத்தகைகளுக்கான வரி முறையை மீளாய்வு செய்வதுடன், தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப காணி நிர்வாக விதிமுறைகளிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முன்மொழிவுகளும் கலந்துரையாடப்பட்டன. (அ)

Ask
CABLE VISION

இப்போது டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மட்டுமே!

150 மேற்பட்ட சனல்கள்!
20க்கும் மேற்பட்ட உள்ளூர் சனல்கள்
130க்கு மேற்பட்ட வெளிநாட்டு சனல்கள்

120 சனல்கள்
1065/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)

155 சனல்கள்
1420/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)

உங்கள் கேபிள் ரிவி இணைப்புக்களை டிஜிட்டலாகமாற்றுங்கள்!
அல்லது
உங்களிடம் சட்டவிரோத இந்திய DTH இணைப்புக்கள்
இருந்தால் அதனை தவிர்த்து எமது டிஜிட்டல்
இணைப்புக்களை பெற்றுக்கொள்ளுங்கள்!

* உங்களிடமுள்ள இந்திய DTH றிசீவர்களை எம்மிடம் தந்து
3 மாதம் இலவசமாக பார்த்து மகிழுங்கள்

* Condition apply

புதிய இணைப்புக்கு
*10,000/-
ரூபா
மட்டுமே!

155 சனல்கள்
*3 மாதம்
இலவசம்

விபரங்களுக்கு
0707 888 999

*Conditions apply

மருதமுனைக்கு தனியான நிர்வாக அலகு வேண்டும்!

அனைத்து பள்ளிவாசல்கள் அமையம் கோரிக்கை

அம்பாறை, ஜூன். 18

மருதமுனைக்கான தனியான நிர்வாக அலகு வேண்டும்.அதிகாரப் பகிர்வின் ஊடாக இதனைப் பெற்று இன்னும் எங்கள் மக்களின் தேவைகளை சிறப்பாகச் செய்ய வேண்டும் என மருதமுனை அனைத்து பள்ளிவாசல்கள் அமைய செயற்பாட்டாளர் எம்.ஐ.எம். முஹர்ரப் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் மருதமுனை பிரதேசத்திற்கான தனியான நகர சபையை வலியுறுத்தி விசேட ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இரவு மருதமுனை தனியார் விடுதியில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அமையத்தின் செயற்பாட்டாளர்களான பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸீல் மற்றும் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி எம்.எம்.எம். முஅஸ்ஸம் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையில்-

மருதமுனைக்கான தனியான நிர்வாக அலகு வேண்டும். இதைப் பெறுவது எமது தார்மீக உரிமையாகும். எங்களிடம் நிர்வாக ஆளணிகள் உள்ளன.அதிகாரப் பகிர்வின் ஊடாக இதனைப் பெற்று இன்னும் எங்கள் மக்களின் தேவைகளை சிறப்பாகச் செய்யவேண்டும். நகர சபை கிடைப்பதன் ஊடாக இன்னும் அதிக அபிவிருத்திகளை மேம்படுத்த முடியும். மருதமுனை பிரதேசத்திற்குத் தனியான நகர சபை அமைப்பதற்கான அனைத்து தகுதிகளும் உள்ளன.

இன்று எமது மக்கள் மருதமுனை பிரதேசத்திற்கான தனியான நகரசபை கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர்.சாய்ந்தமருது நகர சபை அந்த மக்களுக்கு கிடைத்தது போன்று எமக்கும் வழங்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.அதே போன்று சாய்ந்தமருது நகர சபை வழங்கப்பட்ட விடயமானது அப்பகுதி மக்களின் தியாகத்திற்கும் போராட்டத்திற்கும் கிடைத்த ஒரு வெற்றி என்று நாம் கூற வேண்டும்-என்றார். (அ)

புலிகளின் ஆயுதங்கள், தங்கம் தேடி சம்மாந்துறையில் அகழ்வுப் பணி!



அம்பாறை, ஜூன். 18

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிலுள்ள தொய்யும் வட்டை கீழ் கண்டம் பகுதியில் தனியார் வயல் காணியொன்றில் நேற்று புதன்கிழமை அகழ்வுப் பணி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அம்பாறை விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நீதிமன்ற உத்தரவுக்கமைய மேற்குறித்த அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இக்காணியில் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் நிலத்தில் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தை புதைத்து மறைத்து வைத்துள்ளதாக சந்தேகத்தின் அடிப்படையில் இந்த அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த காணியில் மண் அகழ்வு இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஒரு தடயப் பொருளும் கிடைக்கமையால் அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

மக்களை ஏழ்மைக்கு தள்ளி அரச கையிருப்பு அதிகரிப்பு

பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 18

மக்கள் மீது நாளுக்கு நாள் வரி விதித்து, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரித்துக் கொண்டு திறைசேரியில் ரில்லியன் கணக்கில் நிதியை வைத்துக் கொள்வதால் என்ன பயன்? மக்களை ஏழ்மை நிலைக்குத் தள்ளி அரச கையிருப்பை அதிகரித்துக் கொள்வதால் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை முதலில் மேம்படுத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திறைசேரி ரில்லியன் கணக்கான நிதி கையிறுப்பில் இருப்பதாக நிதியமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். மக்கள் மீது நாளுக்கு நாள் வரி விதித்து, அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரித்துக் கொண்டு திறைசேரியில் ரில்லியன் கணக்கில் நிதியை வைத்துக் கொள்வதால் என்ன பயன்?

நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களைப் சிந்திக்காமல், தங்களின் அரசியல் தேவைகளையும் அரசியல் இருப்பையும் முன்னிலைப்படுத்தி, தொடர்ந்து பொய் பிரச்னைகளை உருவாக்கி, மக்களின் கவனத்தை திசை திருப்பி,பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்பை மக்களிடமிருந்து மறைக்க இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து எரிபொருள் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவானது, பழைய விலையின் அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. இதனால் அரசாங்க அதிகாரிகள் தேவையான இடங்களுக்கு தேவையானவாறு செல்ல முடியாமல் போயுள்ளதால், இந்த நாட்டின் அபிவிருத்தி செயல்முறை மிகவும் பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது-என்றார். (அ)

கோரக்கோயில் அகோர மாரியம்மனின் வருடாந்த சடங்கும் தீ மிதிப்பு வைபவமும்

அம்பாறை, ஜூன். 18

சம்மாந்துறை கோரக்கோயில் அருள்மிகு அகோர மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த சடங்கும் தீ மிதிப்பு வைபவமும் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மகோற்சவத்தின் பிரதான நிகழ்வாக தீ மிதிப்பு வைபவம் ஜூன் 29 ஆம் திகதி திங்கள்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பக்தர்கள் பெருமளவில் கலந்துகொண்டு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவுள்ளனர்.

20 ஆம் திகதி சனிக்கிழமை பாற்குடபவனி இடம் பெறும்.

திருவிழா நாள்களில் தினமும் காலை 6.30 மணிக்கு விசேட பூசைகள் நடைபெறுவதுடன், மாலை நேரங்களில் சமய சொற்பொழிவுகள், கிரியாக்கள் மற்றும் உற்சவ நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்வாண்டு மகோற்சவம் தொடர்ந்து பல்வேறு பூசைகள், நேர்த்திக்கடன் வழிபாடுகள், விசேட கிரியைகள் மற்றும் ஆன்மிக நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேலும், ஜூலை 6 ஆம் திகதி எட்டாம் நாள் சடங்குகளுடன் மகோற்சவ நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன. (அ)

இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தின் 100ஆவது ஆண்டு நிறைவுவிழா மட்டக்களப்பில்!

மட்டக்களப்பு, ஜூன். 18

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தின் 100ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, ஆச்சிரம வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து முன்னாள் மாணவர்கள், நன்கொடையாளர்கள், கல்வியாளர்கள், சமூகப் பிரமுகர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், மாணவர் இல்லத்தின் நூற்றாண்டு பயணத்தையும் அதன் கல்வி மற்றும் சமூக சேவைகளையும் நினைவு கூரும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்நூற்றாண்டு விழாவில் முன்னாள் மாணவர்கள், தற்போதைய மாணவர்கள், நலவிரும்பிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பிக்குமாறு இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பின் பொது முகாமையாளர் சுவாமி நீலமாத வானந்தர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

சிறுவர் பாதுகாப்பை வலுப்படுத்த காத்தான்குடியில் முக்கிய மாநாடு

மட்டக்களப்பு, ஜூன். 18

இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஏற்பாட்டில், சிறுவர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த முக்கிய மாநாடு காத்தான்குடி நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எஸ் அருள்ராஜ் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள், சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல், பாதுகாப்பு மற்றும் தற்போதைய சவால்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த மாநாடு, எதிர்காலத்தில் சிறுவர் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கான முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

திருகோணமலையில் பத்மநாபாவின் 36ஆம் ஆண்டு தியாகிகள் தின நிகழ்வு

திருமலை, ஜூன். 18

தோழர் பத்மநாபாவின் 36 ஆவது ஆண்டு தியாகிகள் தினம் தமிழர் சமூக ஜன நாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பணிமனையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம் பெறவுள்ளது என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்ன மோகன் தெரிவித்தார்.

இந்த தியாகிகள் தின நிகழ்வில் வடக்கு கிழக்கு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள், பொது மக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புக்குள் பிரவேசித்த கதிர்காமம் பாதயாத்திரீகர்கள்!

மட்டக்களப்பு, ஜூன். 18

யாழ்- கதிர்காமம் பாத யாத்திரீகர்கள் நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தினுள் பிரவேசித்தனர்.

ஜெயா வேல்சாமி தலைமையிலான 128 அடியார்களும் கடந்த 25 ஆம் திகதி செல்வச் சந்நிதியிலிருந்து ஆரம்பித்து 21 நாள்களாக வட மாகாணத்தில் இருந்து கிழக்கு மாகாணத்தில் பிரவேசித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் காலடி எடுத்து வைத்துள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் திருகோணமலை மட்டக்களப்பு எல்லையில் உள்ள வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

திருகோணமலை...

இந்த இரகசிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சித்திரவதைகளுக்கு ஆளான நபர்கள் மற்றும் அதன் செயல்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் பலரும், நீதவான் முன்னிலையில் இரகசிய வாக்கு மூலங்களை வழங்க முன்வந்துள்ளதாகக் காவல் துறை மேலும் வெளிப்படுத்தியுள்ளது.

(அ)

யோஷிதவுக்கு பிணை...

உத்தரவிட்ட நீதவான், சந்தேக நபருக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதித்தார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேக நபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த பின்னரே கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கை கடற்படை மற்றும் பிரித்தானிய கடற்படை அக்கடமியில் இணைந்தது தொடர்பான விசாரணைக்கு அமைவாக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விடுத்த அறிவித்தலுக்கு இணங்க யோஷித ராஜபக்ஷ நேற்று குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

இலங்கையில்...

புதன்கிழமையுடன் 380 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் 362 என்பு கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், இலங்கையில் அதிகளவான மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியாக செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது.

அதேவேளை, குறித்த செம்மணி மனித புதைகுழியை நாளை வெள்ளிக்கிழமை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான விசேட குழுவினரும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளடங்கிய விசேட குழுவினரும் நேரில் பார்வையிட நீதிமன்றில் அனுமதி கோரி இருந்த நிலையில் அவர்களுக்கான அனுமதியை நீதிமன்று வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

பஸில் ராஜபக்ஷவை...

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கின் மூன்றாவது சந்தேகநபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்ததிஸ்ஸ, தனது வாடிக்கையாளர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 127ஆம் பிரிவின் கீழ் இரகசிய வாக்குமூலம் வழங்கத் தயாராக இருப்பதாக நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

2014ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 7.8 மில்லியன் நிதி, அந்நிதியின் நோக்கத்திற்கு மாறாக ஊவா மாகாண சபைத் தேர்தல் காலத்தில் 12,000 ரீ-சேர்ட்களை விநியோகிப்பதற்காக பயன்படுத்தப்பட்டதாகவும், இதன் மூலம் அரசாங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சி.ஐ.டி. அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனிடையே, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ரூமி ஜவ்பரை தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு தனிப்பட்ட பிணைகளில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டதுடன், வெளிநாடு செல்லத் தடை விதித்தார்.

அரச சொத்துக்கள் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

மேலும், "பி அறிக்கையில்" பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் நிதிப் பணிப்பாளரும் சந்தேக நபராக பெயரிடப்படுவாரா என நீதவான் கேள்வி எழுப்பியபோது, அதுகுறித்த சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கவில்லை என சி.ஐ.டி. தெரிவித்தது.

இந்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

(அ)

யாழ்., வவுனியா, மட்டக்களப்பு உட்பட 10 நகரங்கள் விரைவாக அபிவிருத்தி!

புதிய திட்டம் ஒக்ரோபரில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 18

இலங்கையிலுள்ள 10 முக்கிய நகரங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ள தாக நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

அண்மைய தேசிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கு அமைவாக, "வாழும் நகரங்கள்" எனும் பெயரில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்ப டவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தமித் திஸ ாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, மாத்தளை, ஹற்றன், சிலாபம், தம்புத்தேகம, பதுளை, எஹெலியகொடை, மாத்தறை ஆகிய 10 நகரங்கள் திட்டமிட்ட மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இந்த திட்டத்திற்காக 1.475 பில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை நகரங்களுக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொது வசதிகளை உருவாக்குவதும், தற்போதுள்ள உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதுமே இதன் முதன்மை நோக்கமாகும் என பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

நகரங்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில்,

முறையான போக்குவரத்துத் திட்டங்களை உருவாக்குதல், பன்முக போக்குவரத்து முனையங்களை அமைத்தல், வீதிகள் மற்றும் பாலங்களை புனரமைத்தல்.

நகர்ப்புற வடிகாலமைப்புகளைச் சீரமைத்தல், திண்மக்கழிவு முகாமைத்துவ முறைகளை மேம்படுத்துதல் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை விரிவாக்குதல்.

பொது பொழுதுபோக்கு இடங்களை உருவாக்குதல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், பொதுச் சந்தைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களை நவீனமயமாக்குதல்.

புதிய வணிக வளாகங்கள் மற்றும் வீட்டுத் திட்டங்களை நிர்மாணித்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் இந்த திட்டத்தின் கீழ் நவீனமயமாக்கப்படவுள்ளன.

ரவி, ஷானி...

அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விளக்கத்தை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரை அவர்களது பதவிகளுக்கு நியமிக்கவேண்டும் என்று கார்தினாலோ அல்லது கத்தோலிக்க திருச்சபையோ ஒருபோதும் கோரவில்லை-என்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள சட்ட மனு தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், கைது நடவடிக்கைகளில் இருந்து நிவாரணம் கோரி நீதிமன்றத்தை நாடுவது அவரது சட்டபூர்வ உரிமை எனவும், அது குறித்த இறுதி முடிவு நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே தெரியவரும் எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் உண்மைகளை வெளிக்கொணரவும், அதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் முன்னெடுக்கப்படும் விசாரணைகளைத் தடுக்க சில தரப்புகள் தவறான பிரசாரங்களையும் அவதூறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

சமூக ஊடகங்களில் பரவி வரும் ஆதாரமற்ற மற்றும் பொய்யான தகவல்களால் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்படவேண்டாம் என்றும், உண்மைகள் நீதிமன்ற மற்றும் விசாரணை நடவடிக்கைகள் மூலம் வெளிப்படும் வரை பொறுமையாக இருக்குமாறும் அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ வலியுறுத்தினார்.

(அ)

கோட்டாவின் கைது...

முன்னிலையில் இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, உண்மை நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மனுவை இன்று மீண்டும் அழைக்குமாறு நீதியரசர் றோஹந்த அபேசூரிய உத்தரவிட்டார்.

அதன்படி, இந்த மனு எதிர்வரும் ஜூன் 18 ஆம் திகதி நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் பின்னணியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு தொடர்பான நீதிமன்றத்தின் அடுத்த கட்ட தீர்மானம் குறித்து அரசியல் மற்றும் சட்ட வட்டாரங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

(அ)

ஏ-9 வீதியில்...

உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என பூனாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற பட்டா வாகனம் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வேளையில், பின்னால் வந்த உரம் ஏற்றிய லொறி அதனுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், குறித்த லொறி தரித்து நின்ற பட்டா மீது கவிழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் நுரைச்சோலைப் பகுதியை சேர்ந்த 35 மற்றும் 43 வயதுடைய இருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூனாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

பல்கலை மாணவர்...

பல்கலைக்கழக பிரவேசத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் 42,937 மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் புதிய மாணவர்கள், ஒகஸ்ட் மாதத்தின் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வாரங்களுக்குள் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பேராசிரியர் வசந்த லியனகே மேலும் தெரிவித்தார்.

(அ)

காங்கேசனிலிருந்து...

செய்யப்பட்டதை அடுத்து, குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கு முன்னெடுக்கப்படும் சிவகங்கை பயணிகள் கப்பலில் பயணிக்கவிருந்த இலங்கை மற்றும் இந்திய பிரஜைகளே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் தங்கத்தை உடலுக்குள் மறைத்து வைத்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்த நிலையில், சுங்க அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனை எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நாகபட்டினம்-காங்கேசன்துறை இடையே இடம்பெறும் சிவகங்கை பயணிகள் கப்பல் சேவையில் நேற்று காலை நாகபட்டினத்தில் இருந்து 117 பயணிகள் காங்கேசன்துறையை வந்தடைந்தனர். இவ்வாறு வந்த கப்பலில் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து 146 பயணிகள் நாகைபட்டினம் பயணிக்க காங்கேசன்துறை துறைமுகத்தில் காத்திருந்தனர்.

இவ்வாறு காத்திருந்த 146 பயணிகளில் 25 பேரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பயணிக்க அனுமதிக்காது தடுத்து வைத்தனர் என தெரிவிக்கப்பட்டது.

(அ)

ஈழநாடு
Eelanadu

குமார ஜெயக்கொடிக்கு எதிரான விசாரணைகள் நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஜூன். 18

இலஞ்ச ஆணைக்குழுவால் பதிவு செய்யப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடிக்கு எதிரான விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தொடங்கியது.

இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவேல முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது, ஜெயக்கொடிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பகிரங்க நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டன. அதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்து வாதிட்டார்.

அதனைத் தொடர்ந்து, வழக்கு விசாரணை முறைப்படி தொடங்கியது.

இலஞ்ச ஆணைக்குழுவின்படி, இந்தக் குற்றச்சாட்டுகள் 2016 ஆம் ஆண்டில் லங்கா உர நிறுவனத்தின் கொள்முதல் முகாமையாளராக ஜெயக்கொடி பதவி வகித்தபோது எழுந்தவையாகும்.

ஒரு தனியார் நிறுவனத்துக்கு முறையற்ற வகையில் சாதகமாக இருக்கும் விதத்தில், நிறுவனத்தின் வளாகத்துக்குத் தரைவிரிப்பு விரிக்கும் ஒப்பந்தத்தை வழங்கியதாகவும், அதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூ. 8,859,708 நிதி இழப்பை ஏற்படுத்தியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் வாதங்களுடன் இந்த விசாரணை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

சகல அபிவிருத்தி திட்டங்களையும் கன மழைக்கு முன் நிறைவு செய்க!

வடக்கு மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 18

எதிர்வரும் ஆண்டிறுதியில் எதிர்பார்க்கப்படும் கனமழைக்கு முன்னதாக, மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் துரிதமாக நிறைவு செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நன்னீர் மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் துறைசார் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அதிகாரிகளுக்கு விசேட அறிவுறுத்தல் வழங்கிய ஆளுநர், "இந்த ஆண்டிறுதியில் கனமழை எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, மழைகாலத்துக்கு முன்னதாகவே திட்டங்களை நடைமுறைப்படுத்தி முடிப்பதற்கு அனைத்துத் திணைக்களங்களும் உறுதியான நிலைப்பாட்டைக் காண்பிக்க வேண்டும்," எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றைத் துரிதப்படுத்துவதற்கான பொருத்தமான அறிவுறுத்தல்களும் ஆளுநரால் வழங்கப்பட்டன.

பின்னர், விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நன்னீர் மீன்பிடிப் பிரிவு, நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் செயற்றிட்ட முன்னேற்றங்கள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டன.

இதன்போது, அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் களத்தில் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்னைகள் மற்றும் ஆளணிப் பற்றாக்குறைகள் தொடர்பில் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்விடயங்களை விரிவாக ஆராய்ந்த ஆளுநர், அச்சிக்கல்களைத் தீர்த்து வேலைத் திட்டங்களைச் சீராக முன்னெடுப்பதற்கான உரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார். (அ)

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி பாராளுமன்றத்தில் முழுநாள் விவாதம்

கோரவுள்ளார் கஜேந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன். 18

வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்றில் முழுநாள் விவாதமொன்றைக் கோரவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், ப.சத்தியலிங்கம் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்றில் முழுநாள் விவாதமொன்றைக் கோரவுள்ளதாக தெரிவித்தார். (அ)

கடந்த மே மாதத்தில் வெளிநாட்டு பணப் பரிமாற்றம் 32 வீதம் உயர்வு

கொழும்பு, ஜூன். 18

2025 மே மாதத்தில் பெறப்பட்ட 641.7 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், 2026 மே மாதத்தில் தொழிலாளர்கள் அனுப்பிய பணவரவுகளாக 847 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுள்ளது.

இது 32 வீத அதிகரிப்பு என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2025 டிசெம்பரல் பெறப்பட்ட சாதனை அளவான 879.1 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குப் பிறகு, 2026 மே மாதத்தில் பெறப்பட்ட இந்தத் தொகை, நாட்டின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது மிக உயர்ந்த மாதாந்திரப் பணப் பரிமாற்றமாகும்.

2026 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், இலங்கை 3.9 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி வருவாயைப் பெற்றது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் பதிவான 3.10 பில்லியன் அமெரிக்க டொலரை விட 26 வீதம் அதிகமாகும்.

இந்த ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்துதான் அதிகபட்ச பணப் பரிமாற்றங்கள் வந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், 2026 ஜனவரி முதல் மே வரையிலான காலகட்டத்தில் 100,686 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகப் புறப்பட்டனர். அவர்களில், 21,977 பேர் ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் சென்றனர். (அ)

யாழ்ப்பாணத்தில் காணி இல்லாதவர்களுக்கு நவீன வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்பு

இளங்குமரன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன். 18

யாழ்ப்பாணத்தில் காணி இல்லாதவர்களுக்கு நவீன வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்பு அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டுக்கான வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீள் குடியேற்ற அமைச்சசினால் 10 இலட்சமாக இருந்த வீட்டுத்திட்டத் கொடுப்பனவுகள் 15 இலட்சமாக அதிகரித்து பின்னர் மீளவும் தற்போது 5 இலட்சம் அதிகரிக்கப்பட்டு 20 இலட்சமாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டு தேவையை விரைவில் நிவர்த்தி செய்யவுள்ளோம்.

காணி இல்லாதவர்களுக்கு பொறிமுறை ஒன்றின் ஊடாக அவர்களுக்கும் வீட்டுத் திட்டத்தை வழங்குவதற்காக அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்களை அமைப்பது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் நவீன வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி கட்டடங்களின் அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

அத்துடன் சஜித் பிரேமதாஸவினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் வீடுகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்படுகின்றன. அதற்குரிய பொறிமுறையை ஏற்படுத்தி அதனை நிவர்த்தி செய்வோம்-என்றார். (அ)

பிரதி தபால் அதிபர்கள் 192 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கல் இன்று!

கொழும்பு, ஜூன். 18

தகுதிகளைப் பூர்த்தி செய்த 192 பிரதி தபால் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.

இந்த வைபவம் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் கொழும்பு பிரதான தபால் அலுவலகத் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

சுமார் 2019-ஆம் ஆண்டு முதல் தற்காலிக துணை அஞ்சல் நிலைய அதிகாரிகளாகப் பணியாற்றி வரும் 192 அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவது தொடர்பாக, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைவாக 2020 ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் பணியில் அமர்த்தப்பட்ட 196 அதிகாரிகளில், தகுதிகளைப் பூர்த்தி செய்த 192 தற்காலிக துணை அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்.

இந்த நியமனங்கள் நிரந்தரமான ஓய்வூதிய தகுதி உடையவையாகும். (அ)

உமையாள்புரம் விபத்தில் அளவெட்டி இளைஞர் பலி!

கிளிநொச்சி, ஜூன். 18

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உமையாள்புரம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் தனது பணியை முடித்து மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் விழுந்து மரத்துடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 35 வயது உடைய ஆனந்தராஜ் நிதர்சன் என்ற இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

வெளிநாட்டில் வேலை தருவதாக கூறி மோசடி; இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்தியர் கைது!

கொழும்பு, ஜூன். 18

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஒருவரிடமிருந்து 49 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மோசடி செய்த இலங்கை குடியுரிமை பெற்ற இந்திய நாட்டவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டை தொடர்ந்து கிளிநொச்சி விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பின்னர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிதி மோசடி தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.06.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.